2001 செப்டம்பர் 7] [திரு. கே.வி. முரளிதரன்]

ஒகேனக்கல் போவதற்கு வசதியாக இருக்கும். கர்நாடகாவிலிருந்து வருகின்ற மக்களுக்கு 35 கிலோ மீட்டர் குறைவாக இருக்கும். அதை நீங்கள் கண்டிப்பாகச் செய்ய வேண்டும்.

அதேமாதிரி ஆதிதிராவிடர் மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்புத் தந்தது எனக்கு மிகப் பெருமையாக இருக்கிறது. பென்டமுல்லாம் என்ற பஞ்சாயத்தில் எஸ்.சி., எஸ்.டி. மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே Forest Gate ஒன்று இருக்கிறது. ஏதாவது ஒரு disease வந்து, யாராவது அந்த gate–க்குள் வரவேண்டுமென்றால் 150 ரூபாய் கட்ட வேண்டும். இல்லையென்றால் விடுவதில்லை. எனவே, அந்த gate அப்படியே இருக்கட்டும். காசு கட்டாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேமாதிரி வனப் பகுதியில் யானையினால் நிறைய இழப்பு ஏற்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் யானையினால் இழப்பு ஏற்பட்டால் உடனே ஒரு மாதத்திற்குள் எவ்வளவு இழப்பு என்று பார்த்து, 10,000, 15,000 ரூபாய் என்று கொடுக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் ஆறு மாதங்கள் ஆனாலும் கொடுப்பதில்லை. கடைசியில் இரண்டாயிரம் ரூபாய்தான் கொடுக்கிறார்கள். அதற்குக் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேமாதிரி 2001–2002 ஆம் ஆண்டு பட்ஜெட்டில் நம்முடைய நிதியமைச்சர் கூறியிருக்கிறார்கள். எல்லோரும் இவ்வளவு கோரிக்கை வைத்தால் ஆகாது. நமக்கு நாமே திட்டம்–Reserve Bank announce செய்தால் ஏதாவது செய்ய முடியும். Sanitary Complexes announce பண்ணியிருக்கிறீர்கள், Village Panchayat–ல் எல்லாம் Sanitary Complex கட்டினால் பயன்படாது. அது டவுனில்தான் use ஆகும். Village Panchayat–ல் கட்டினால் கண்டிப்பாக அது use ஆகாது. எங்களுக்கு மைராடா என்ற Private Scheme இருக்கிறது. எங்கள் 15 ஊர்களிலே Sanitary Complex......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உரையை முடித்துக்கொள்ளுங்கள். வணக்கம் என்று முடியுங்கள்.

பிற்பகல் 1–30

4. அறிவிப்பு

உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாலை சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நடைபெறவிருப்பதால், மாலை 4–30 மணியள்வில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தை ஒட்டிய பகுதியில்

உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-30

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

3. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2001-2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. டி.பி.எம். மைதீன்கான்.

திரு. டி.பி.எம். மைதீன்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர், சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த அறிஞர் பெருமக்களும், தியாக சீலர்களும் அங்கம் வகித்த இந்த மகத்தான அவையில் சாதாரண பிற்படுத்தப்பட்ட சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த என் குரலும் ஒலிக்கத்தக்க வகையில் என்னைத் தேர்ந்தெடுத்த பாளையங்கோட்டை சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், அதற்கு வழிவகுத்த, 'பாளையங்கோட்டை சிறைச்சாலை, நான் புனித யாத்திரை செல்லும் திருத்தலம்' என்று பேரறிஞர் அண்ணா அவர்களால் போற்றப்பட்டு, பாளையங்கோட்டைக்கு மகத்துவம் ஏற்படுத்திக் கொடுத்த, மொழிப் போரில் தனிமைச் சிறையில் தியாக வரலாறு படைத்து, அன்னைத் தமிழ் மொழி காக்க உரிமைக் குரல் எழுப்பிய உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவர், ஐந்தமிழ் அறிஞர், என் உயிரினும் மேலான தாயுள்ளம் கொண்ட தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், இம்மன்றத்தின் எதிர்க் கட்சித் தலைவர் பேராசிரியர் பெருந்தகை அவர்களுக்கும், நாளைய தமிழினத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்குகிற தமிழகத்தின் தலைநகரின் தலைமகன், தளபதி